செ.வெ.எண்:17/ஜுன் நாள்:10.06.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான விழிப்புணர்வு உறுதி மொழியினை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்து துறை அரசு அலுவலர்கள் எடுத்துக் கொண்டனர்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (10.06.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான உறுதி மொழியினை அனைத்து துறை அரசு அலுவலர்களும் ஏற்றுக் கொண்டனர்.

அதன்பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மனித வாழ்க்கையில் குழந்தை பருவமானது மிகவும் இனிமையான கால கட்டமாகும். குழந்தை பருவத்தில் பல புதிய விசயங்களை கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் குழந்தைகளிடத்தில் அதிகமாக இருக்கும். இத்தகைய காலகட்டத்தில் குழந்தைகளை கல்வி கற்க பள்ளிகளுக்கு அனுப்புவது பெற்றோர்களின் கடமையாகும். இருப்பினும் வறுமையின் காரணமாகவோ, பிற தவிர்க்க முடியாத சூழ்நிலைகளின் காரணமாகவோ பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பாமல் வேலைக்கு அனுப்பும் நிலை ஏற்படுகின்றது. இத்தகைய சூழ்நிலையை கட்டாயம் தவிர்த்திட வேண்டும்.

கல்வி கற்பது ஒவ்வொரு குழந்தையின் அடிப்படை உரிமையாகும். குழந்தை தொழிலாளர் முறையினை முற்றிலுமாக அகற்றிட வேண்டும் என்ற விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையில் ஆண்டு தோறும் ஜீன் மாதம் 12-ஆம் நாள் குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் குழந்தை தொழிலாளர் முறையினை முற்றிலுமாக அகற்றிட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை உணவு விடுதிகள், தொழிற்சாலைகள், பெரு நிறுவனங்கள் உள்ளிட்டவற்றில் பணியமர்த்துவது இந்திய அரசியலமைப்பு விதிகளின்படி தண்டனைக்குரிய குற்றமாகும். இராமநாதபுரம் மாவட்டத்தில் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை பணியில் அமர்த்தும் நிறுவனங்கள் ஏதேனும் கண்டறியப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் குழந்தை தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கான விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினையும் கையொப்பமிட்டு துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலி அக்பர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, மாவட்ட தொழிலாளர் நல அலுவலர் திரு.காளிதாஸ், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ராஜசேகரன், உள்பட அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**